**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 490/2014**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மாயக்கண்ணன் | Caste | : | |
| Father/Husband Name | : | போஸ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(A6 Absent. Petition filed and Allowed. A4 Died. All other Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 05.06.2025**

**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவ காவலத்தில் நான் விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரிகளை இந்த சம்பவம் நடப்பதற்கு முன்பு எனக்கு தெரியாது. விக்கிரமங்கலம் காவல் நிலையத்திற்கு காவல் ஆய்வாளர் செக்கானூரணி காவல் ஆய்வாளர் என்பதால் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் நாங்கள் பணிசெய்வோம். நான் சம்பவம் நடந்த சமயத்தில் செக்கானூரணி காவல் நிலையத்தில் சிறப்பு வேலை நிமித்தமாக பணியில் இருந்தேன். சம்பவம் சம்பந்தமாக 01.07.2013 ஆம் தேதியில் காலை 06.00 மணிக்கு காவல் ஆய்வாளர் தகவல் சொன்னார். இவ்வழக்கு 16.06.2013 ஆம் தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. காவல் ஆய்வாளர் 01.07.2013 ஆம் தேதியில் என்னையும், தலைமை

காவலர் பாஸ்கர் என்பவரையும் அவருடன் ஜீப்பில் எதிரி வயக்காட்டு சாமியுடன் ஈரோடு சூரம்பட்டிக்கு சென்றோம். நான் காவல் ஆய்வாளருடன் சென்றபோது, எதிரி வயக்காட்டு சாமி ஜிப்பில் இருந்தார். சூரம்பட்டிக்கு மாலையில் சுமார் 04.00 மணியளவில் சென்றடைந்தோம். சூரம்பட்டியில் வாகனத்தை கைப்பற்றிய இடத்தில் ஆள்நடமாட்டம் இருந்ததா என்றால் இல்லை. அருகில் எந்த கடைகளும் இல்லை. மேற்படி வாகனம் தனியாகத்தான் இருந்தது. நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் வைத்து இந்த வழக்கு சொத்து வாகனத்தை கைப்பற்றபடவில்லை என்றாலும், வேறு ஏதோ வழக்கின் உள்ள வாகனத்தை இவ்வழக்கில் பொய்யாக இவ்வழக்கின் வழக்கு சொத்தாக புள்ளிவிபர கணக்கிற்காக சேர்த்து மேல் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்பேரில் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.06.05 00:32:25 +0530

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 490/2014**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : பழனிச்சாமி | | Caste | : |
| Father/Husband Name | : அய்யாவு | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(A6 Absent. Petition filed and Allowed. A4 Died. All other Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 05.06.2025**

**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவ நடந்த நாளில் செக்கானூரணி காவல் நிலையத்தில் தலைமை காவலராக நான் பணியில் இருந்தபோது காவலர் சாட்சி பாபுகாந்தி என்னுடன் பணிபுரிந்தார் என்றால் சரிதான். செக்கானூரணி தேவர் சிலையை சுற்றியும் ஆள் நடமாட்டமும், வாகன நெரிசலும் இருக்கும் என்றால் சரிதான். எதிரி சின்னன் என்பவர் வீட்டில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் தெரியாது. வழக்கு சொத்து எங்கியிருந்து கொண்டுவரபட்டது யாரிடமிருந்து கொண்டுவரப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தேவர் சிலைக்கும் செக்கானூரணி காவல் நிலையத்திற்கும் 30 மீ தொலைவு இருக்கும். எதிரியை சோதனை செய்து வழக்கு சொத்தை அத்தாட்சியில் கைப்பற்றி எதிரியை கைது செய்து நிலையம் கொண்டுவர 45 நிமிடம் ஆகும். சம்பவம்

நடந்தபோது அதிகாலை 03.45 மணிக்கு மேற்படி எதிரியை நிலையம் கொண்டுவந்தோம். வழக்கின் கைப்பற்றப்பட்ட பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் ஏற்கனவே வேறு வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக சம்பவ இடத்தில் இல்லாத எதிரிகளை சார்பு ஆய்வாளர் ரவி கேட்டுகொண்டதன்பேரில் அத்தாட்சியில் கையொப்பம் செய்தேன் என்றாலும், புள்ளிவிபர கணக்க்கிற்காக எதிரிகளின் மீது போடப்பட்ட பொய் வழக்கிற்க்கு ஆதரவாக பொய்சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.06.05 00:32:33 +0530